Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 251 | வியாழக்கிழமை 04 ஓகஸ்ட் 2022 | ஆடி 19 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50

**முச்சந்தி முரளி**



"கேக்கிறதுக்கு எல்லாம் நல்லாத்தான் கிடக்குது. உண்மையில நடந்திட்டு எண்டால் இன்னும் சந்தோசம் தான் கண்டியளோ"

அரசியல்கைதிகள் விடுதலை | காணி விடுவிப்பு

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை

# கூட்டமைப்பு கோரிக்கை; ஜனாதிபதி இணக்கம்!

## தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்க நேற்று மாலை நடந்த சந்திப்பில் முடிவு



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 4

ஜனாதிபதிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் கைதிகளை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணையைத் துரிதமாக ஆரம்பித்தல், படையினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல், புதிதாகக் காணிகளை ஆக்கிரமிப்பதை உடனடியாக தடுத்து நிறுத்துதல் போன்ற தமிழ் மக்களுக்கு அவசியமான விடயங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார். 11

ஜனாதிபதித் தெரிவு

## கூட்டமைப்பு உறுப்பினர்கள் எனக்கு வாக்களித்தார்கள்!

### உண்மையைப் போட்டுடைத்தார் ரணில்

யாழ்ப்பாணம், ஓக. 4

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தெரிவு இடம்பெற்றபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப் 11

சர்வகட்சி அரசாங்கத்தில்

## அமைச்சுப் பதவிகளை பெறக்கூடாது கூட்டமைப்பு

### தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் கே.வி.தவராசா அழுத்தம்திருத்தம்

கொழும்பு, ஓக. 4

சர்வ கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 03

ஜனாதிபதிக்கு உள்ள

## கட்டுமட்டில்லாத அதிகாரம் குறைக்கப்படுதல் வேண்டும்

### மக்கள் சபை முறைமையை முன்வைக்கிறார் ரணில்

கொழும்பு, ஓக. 4

தற்போது ஜனாதிபதியிடம் இலங்கையின் ஆதிகாலத்தில் அரசர் ஒருவரிடம் இருந்த அதிகாரங் 11

## சர்வகட்சி அரசாங்கம்: ஜே.வி.பி. இணையாது

கொழும்பு, ஓக. 4

சர்வகட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கப் போவதில்லை என ஜே.வி.பி. அறிவித்துள்ளது. 03

## தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு தற்போது அதுவே அத்தியாவசியம்

### அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையில் ரணில் அழுத்தமாகச் சுட்டிக்காட்டு

### நாட்டைக் கட்டியெழுப்ப புலம்பெயரிகளின் உதவியையும் கோருகிறார்

கொழும்பு, ஓக. 4

இலங்கையில் பல வருட காலமாக தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியமை அத்தியாவசியமான ஒன்றாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையில் நேற்றுத் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன் 11

## இந்து சமய நிகழ்வுகளை குழப்புவதற்குச் சதி முயற்சி

### ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 4

இந்த மாதம் பௌத்த மற்றும் இந்து சமய பிரதான பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. 03

யாழ்.திருநெல்வேலியில்

## எரிவாயு பதுக்கியவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம்!

விரிவு - பக். 03

## ஓகஸ்ட் 11 முதல் யாழிலிருந்து இரவு ரயில்!

கொழும்பு, ஓக. 4

நீண்ட காலத்தின் பின் காங்கேசன்துறை - கல்கிசை இடையே இரவு நேர ரயில் சேவையை ஆரம்பிக்க ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் 10 ஆம் திகதி கொழும்பிலிருந்து 03

## பாதாள உலகக் கோஷ்டியினரே எரிபொருள் வரிசை குழப்பிகள்

### ரணிலின் ஒப்பீடு இது

கொழும்பு, ஓக. 4

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் வன்முறையைத் தூண்டும் குழுவினர் உள்ளனர். நாள் கணக்காக வரிசையிலுள்ள மக்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்கு இடமளிக்காது, பலவந்தமாக வரிசைகளைக் கடந்து முன்வருவோர் குறித்து 03

## ஜோசப் ஸ்டாலின், மகாநாமதேரர் பொலிஸாரால் நேற்றுக் கைது!

### போராட்டக்காரர்கள் மீதான வேட்டை தொடர்கிறது

கொழும்பு, ஓக. 4

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், 'கோத்தா கோ தம' செயற்பாட்டாளர் மகாநாம தேரர் ஆகியோர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 28ஆம் திகதி லங்கா வங்கி மாவத்தையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் செயற்பட்டார் 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டிறுதி வரையில் எரிபொருள் நெருக்கடி

## நாட்டுக்காக தாங்கிக் கொள்ளுமாறு மக்களைக் கோருகின்றார் ரணில்

கொழும்பு, ஓக. 4

**இந்த ஆண்டு இறுதி வரையில் எரிபொருள் நெருக்கடி தொடரும். நாட்டுக்காக மக்கள் அதனைத் தாங்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அக்கிராசன உரையில் குறிப்பிட்டார்.**

**பொருளாதாரத்தை பாதித்தவை**

1977ஆம் ஆண்டு எமது நாட்டுக்குப் புதிய பொருளாதார முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் காலத்துக்குப் பொருந்தக் கூடியவாறு எம்மால் நவீனமயப்படுத்த முடியவில்லை. பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கு கவனம் செலுத்தாது போட்டித்தன்மை, தூரநோக்கற்ற அழிவுமிக்க குறுகிய அரசியலில் நாம் ஈடுபட்டோம். உக்ரேன் போர் மற்றும் கொவிட் தொற்று காரணமாக உலகின் பிரதான பொருளாதாரங்கள் சரிந்து விழுதல் உள்ளிட்ட சர்வதேசத்தில் இடம்பெற்ற அனுகூலமான பொருளாதாரக் காரணிகள் எமது நெருக்கடியை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது.

**முன்னேற்றம்**

தற்போதுள்ள மின்வெட்டைக் குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது. பயிர்செய்கைக்காக எதிர்காலத்தில் தேவைப்படும் உரத்தைக் கொண்டுவருவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சமையல் எரிவாயுப் பிரச்சினை தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டு வரும் நிலையில் உள்ளது. வரிசையில் காத்திருக்காது சமையல் எரிவாயுவை இன்னும் சில தினங்களில் அனைவராலும் பெற்றுக் கொள்ள முடியும். உணவுத் தட்டுபாடொன்று ஏற்படாதவாறு அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதித் துறை என்பவற்றுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

**எரிபொருள் பிரச்சினை**

தற்போது எமது முன்னால் உள்ள குறுங்கால பிரச்சினை எரிபொருள் தட்டுப்பாடாகும்.எரிபொருளை கொண்டு வருவதற்காக ஏனைய நாடுகளிடமிருந்து கடன் உதவிகள் கிடைக்கும் வரையில் காத்திருக்கும் முறைமையை நாம் முடிவுக்கு கொண்டு வருதல் வேண்டும். எனவே எமது நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று ஊடாக எரிபொருளைக் கொண்டு வருவதற்கான முறைமை ஒன்றை நாம் ஆரம்பிக்க உள்ளோம். இதன் போது எரிபொருளுக்கான கொடுப்பனவை சமப்படுத்திக்கொள்வதற்காக தேர்ந்தெடு இறக்குமதிகளை வரையறுத்துக்கொள்ள வேண்டியும் எமக்கு ஏற்படும் மறுபுறமாக எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டியும் ஏற்படும். எனவே இந்த ஆண்டின் இறுதி வரையில் இந்தக் கஷ்டத்தை நாட்டுக்காக நாம் தாங்கிக்கொள்ளல் வேண்டும் - என்றார். (ஒ-5)

# சர்வகட்சி அரசாங்கத்தில் இணையுமாறு நேசக்கரம்

## ரணில் தனது உரையில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 4

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக ஒன்றிணையுமாறு நான் மீண்டும் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துத் தரப்பினரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். கடந்த காலத்தை பின்தள்ளிவிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணையுமாறு நம்பிக்கையுடன் அழைப்பு விடுக்கின்றேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அக்கிராசன உரையில் நேற்றுத் தெரிவித்தார்.

அந்த உரையில், நான் கஷ்டத்தில் விழுந்திருந்த நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான பொருளாதாரப் பிரச்சினை ஒருபுறம். மக்கள் எதிர்ப்பு மறுபுறம். எனினும் நாட்டுக்காக இந்த கடினமான சவாலை பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். இருளுக்கு சாபமிட்டுகொண்டு இருப்பதை விட ஒரு விளக்கினையேனும் ஏற்றுவது நாட்டுக்காக நான் செய்யும் கடமை என்பதாலேயே பொறுப்பேற்றேன்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக நாடாளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் எதிர்பார்ப்பு. ஒன்றிணையும் பட்சத்தில் எம்மால் நாட்டைக் கட்டியெழுப்பமுடியும். பிரிந்து சென்றால் நாடாளுமன்றத்திலிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமன்றி முழு நாட்டு மக்களும் துன்பத்துக்கும் அழிவுக்கும் உள்ளாகுவார்கள்.

சர்வகட்சி அரசாங்கம் ஒரு கட்சியின் தனி விருப்புக்கு ஏற்ப செயற்படுகின்ற அரசாங்கமொன்றல்ல. அது பொதுக் கொள்கை வட்டத்தினுள் அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களின் பிரகாரம் பயணிக்கும் அரசாங்கமொன்று என்பதுடன் நம் அனைவரினதும் கருத்துக்களின் பிரகாரம் செயற்படும் அரசாங்கமொன்றாகும்.விரைவில் இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டு உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்காக சர்வகட்சி அரசாங்கத்தின் முக்கியத்துவம் பற்றி மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன் - என்றார். (ஒ-5)

# இந்தியாவின் மூச்சாலே இலங்கை பிழைத்தது

## நன்றி கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஓக. 4

இலங்கையின் மீண்டெழும் முயற்சிக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய உயிர் மூச்சே காரணம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'மீளெழும் முயற்சியிலே எமது அயல் நாடான இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நான் விசேடமாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் எமக்கு வழங்கிய உயிர் மூச்சுக்கு நான் இலங்கை மக்கள் சார்பாக மோடிக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இந்திய மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்' - என்று தனது அக்கிராசன உரையில் ரணில் குறிப்பிட்டார். (ஒ-5)

# கடன் நிலைப்படுத்தல் முடிவுறும் தறுவாயில்

கொழும்பு, ஓக. 4

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான கடன் நிலைப்படுத்தல் வேலைத்திட்டமானது முடிவுறும் தறுவாயில் உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'மீளெழுச்சிபெறும் ஆரம்பக் கட்டமொன்றாக நாம் சர்வதேச நிதியத்தோடு நான்கு வருட வேலைத் திட்டமொன்று தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்தோம். இந்த மாதத்திலிருந்து நாம் அந்த கலந்துரையாடல்களை மீண்டும் முன்னெடுத்துச் செல்வோம். ஆரம்ப கட்ட உயர்மட்டத்திலான கலந்துரையாடல்களைச் துரிதமாகவும் சிறப்பான முறையிலும் முடிப்பது எமது எதிர்பார்ப்பாகும்.

சர்வதேச நிதியம் மற்றும் சட்ட நிபுணர்களான லசாட் மற்றும் கிளிபட் சான்ஸ் நிறுவனங்களோடு சேர்ந்து கடன் நிலைபடுத்தும் திட்டம் தற்போது முடியுறும் தறுவாய்க்கு வந்துள்ளது.

இந்தத் திட்டத்தை இன்னும் சில தினங்களில் நாம் சர்வதேச நிதியத்திடம் முன்வைப்போம். அதன்பின்பு எமக்கு கடன் உதவிகள் வழங்கியுள்ள நாடுகளோடு கலந்துரையாடுவோம். அதன் பின்பு தனியார் கடனாளிகளோடும் கலந்துரையாடல்களை ஆரம்பிப்போம். அவர்களோடு உடன்பாட்டுக்கு வருவோம்' - என்றார். (ஒ-5)



ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு நேற்று வருகை தந்தார்.

# நாட்டின் பொருளாதார நெருக்கடி நடுத்தரவகுப்பினர் சுருங்குகின்றனர்

கொழும்பு, ஓக. 4

இன்று நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் பிரதிபலனாக இருப்போர் இல்லாதோர் இடைவெளி விரி வடைந்துகொண்டு செல்கின்றது. நடுத்தர வகுப்பினர் சுருங்கிச் செல்கின்றார்கள். இன்னுமொரு பக்கத்தில் தொழில் முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்கின்றது. தொழில்கள் இல்லாது போகின்றன - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நேற்றைய உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**பணம் அனுப்புதல் குறைந்தது**

கடந்த காலத்தில் வெளிநாட்டு ஊழியர்கள் இலங்கைக்கு அனுப்பும் நிதியின் அளவு குறைந்துவிட்டது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. கொவிட் தொற்றுப்பரவல் காரணமாகப் பல தொழில்கள் இல்லாது போனது. தொழில்களுக்காக வெளிநாடு செல்வோர் குறைந்துள்ளனர். ரூபாயின் பெறுமதியைச் செயற்கையாகக் கட்டுப்படுத்தியதன் காரணமாக வேறு முறைகளின் மூலம் இலங்கைக்கு பணம் அனுப்புதல் மிகவும் இலாபகரமானதாக இருந்தது. தற்போது படிப்படியாக இந்நிலைமை மாற்றமடைந்து வருகின்றது. வங்கி முறைமையினூடாக இலங்கைக்குப் பணம் அனுப்புதலை ஊக்குவிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம்.

சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவது இந்த மாதத்திலிருந்தாகும். இச்சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் வருவித்துக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**நிவாரணம்**

நாடு முழுவதும் வசிக்கும் ஏழை மக்களுக்கு குறுகியகால நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். மீண்டும் விரிவான நடுத்தர வர்க்கத்தினரை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படையை உருவாக்குவேன். சமூக சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் ஊடாக நன்மைகள் முழு சமூகத்துக்கும் நியாயமானவாறு பெற்றுக்கொடுப்பேன்.

**சமூக நியாயாதிக்க ஆணைக்குழு**

இந்தக் குறிக்கோள்களை ஈடேற்றும் செயற்பாடுகளுக்காகச் சமூக நியாயாதிக்க ஆணைக்குழுவொன்றை நிறுவ நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைச்சுப்...

அழைப்பு விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில், அமைச்சுப் பதவிகள் நிபந்தனையாக முன் வைக்கப்படலாகாது என்பதுடன், ஜனாதிபதி அமைச்சுப் பதவியை வழங்கினாலும் அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்கவேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணியும், தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவருமான கே.வி.தவராசா. கூட்டமைப்பின் தலைவருக்கு இது தொடர்பில் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை வகித்து வரும் நீங்கள், தீர்க்கமான முடிவொன்றை எடுக்கும் முக்கியமான கட்டத்தில் இருக்கின்றீர்கள். நாடு இப்போது எதிர்நோக்கியுள்ள அரசியல் நெருக்கடி குறித்து நீங்கள் மிக நன்றாகவே அறிவீர்கள். சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அமைச்சுப் பதவிகள் நிபந்தனையாக முன்வைக்கப்படலாகாது என்பதுடன், ஜனாதிபதி அமைச்சுப் பதவியை வழங்கினாலும் அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகிய நீங்கள் நிராகரிக்கவேண்டும். ஏனெனில் நீங்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்வீர்களாயின் தமிழர் அபிலாஷைகளை கேலிக்குள்ளாக்கி ,மக்கள் இத்தனை நாட்பட்ட துன்பங்களையும் அர்ப்பணிப்புகளையும் கேள்விக்குள்ளாக்கி, உரிமைகளையும் இருப்பையும் நகைப்புக்குள்ளாக்கிவிடும்.

எனவே இத்தகைய பொறுப்பற்ற செயற்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்புள்ள தலைவராக நீங்கள் முன்னெடுக்கமாட்டீர்கள் என நாம் வலுவாக நம்புகின்றோம். உங்களுடைய கடைசிக் காலத்தில் தமிழ் மக்களை தலைகுனிய வைக்கமாட்டீர்கள் என்றும் நாம் நம்புகின்றோம். அமைச்சரவையில் அங்கத்துவம் பெறும் எண்ணம் கிஞ்சித்தேனும் உங்கள் மனதில் இருக்குமானால், அந்த எண்ணத்தை உடனடியாக மாற்றிக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியத்தின் பெயராலும் ஒட்டுமொத்த மக்களின் உணர்வுச் செறிவாலும் ஒரு தமிழனாக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

**அமைச்சுப் பதவிகளைப் பெற கூட்டமைப்பில் சிலர் திட்டம்**

இவ்வாறான வேண்டுகோளை முன்வைப்பதற்கான காரணம் யாதெனில், தேசிய அரசியலில் காட்டும் தீவிர அக்கறையை தமிழ்த் தேசிய அரசியலில் காட்டாமல் தமிழ்த் தேசிய அரசியலைப் புறந்தள்ளி ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுப் பதவிகளுக்கு ஆசைப்படுகின்றார்கள் என்பது அவர்களது அண்மைய செயற்பாடுகள் மூலம் வெளிப்படையாகத் தெரிகின்றது. அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு அமைச்சுப் பதவி தேவை என்பதை அறிவித்துவிட்டு கட்சியைவிட்டு வெளியேறி தமது ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளட்டும்.

தேசிய சர்வகட்சி வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதற்கு சகல ஒத்துழைப்பும் வழங்கப்படும் என ஜனாதிபதிக்கு வாக்குறுதி வழங்கியுள்ளீர்கள். இந்தப் பேச்சின் போது நீண்ட காலமாக தீர்க்கப்படாமலிருக்கும், அரசியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, காணி அபகரிப்பைத் தடுத்தல், அதிகாரத்தின் பிரயோகிப்பில் கையகப்படுத்தப்பட்ட காணிகள் மீட்பு, வடக்கு - கிழக்கில் இராணுவக் கெடுபிடிகளை அகற்றுதல். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பவற்றுக்கு விரைவில் தீர்வு காண்பதுடன் 74 வருடங்களாகத் தீர்க்கப்படாத இனப்பிரச்சினை தீர்வுக்கான வழிகள் தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரத் தீர்வு காணப்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் உங்களுக்கு கிடைக்கின்ற கடைசிச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடாதீர்கள் - என்றுள்ளது. (அ-ம)

## இந்து சமய...

ஆயினும் இந்த வைபவங்களைச் சீர்குலைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தனது அக்கிராசன உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகமான சுற்றுலாப் பயணிகள் இந்த மாதம் வருகை தருவதற்கான காரணங்களில் பௌத்த மற்றும் இந்து சமய வைபவங்களும் முக்கியமான காரணங்களாக உள்ளன. ஆயினும் நாட்டின் குழப்பமான பின்னணி ஏற்படுத்தி வைபவங்களைச் சீர்குலைப்பதற்கும் ஒரு சில குழுக்கள் முயற்சித்து வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பாதுகாப்புப் பிரிவினர் இது குறித்து அவதானிப்புடன் உள்ளனர். இவ்வாறான சூழ்ச்சிகளில் சிக்கி நாட்டின் எதிர்காலத்தைச் சீர்குலைக்கும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாமென நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (அ-ஒ-5)

## எரிவாயு...

எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்கிய வர்த்தகருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்தது யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றம்.

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில், பொதுமக்களுக்கு எரிவாயு சிலிண்டர்களை வழங்காமல் பதுக்கிய வர்த்தகருக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த நிலையில், அந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, குறித்த வர்த்தகர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவருக்கு ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (அ-ம-20)

## ஜோசப் ஸ்டாலின்...

என்ற குற்றச்சாட்டில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தமைக்காக, 'கோத்தா கோ கம' செயற்பாட்டாளர் மகாநாம தேரர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரியவருகின்றது.

கடந்த சிலநாள்களாக, காலிமுகத்திடல் போராட்டத்தில் முன்னின்று செயற்பட்டவர்களையும், அவர்களுக்கு ஆதரவளித்தோரையும் பொலிஸார் தேடித்தேடி கைது செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பாதாள...

முறைப்பாடுகள் வந்த வண்ணம் உள்ளன. இவ்வாறான பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அக்கிராசன உரையில் நேற்றுத் தெரிவித்தார்.

'இப்போது நாம் எரிபொருள் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளோம். ஆகவே எமக்கு விநியோகிக்கக் கூடிய குறைந்தளவான எரிபொருளை நியாயமான முறையில் விநியோகிக்க வேண்டும். வரிசையை அத்துமீறுபவர்களுக்கு எதிராகச் சட்டத்தை வன்மையாகப் பிரயோகிக்க வேண்டுமென நான் பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன்' என்றும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-5)

## சர்வகட்சி...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

உத்தேச சர்வகட்சி அரசாங்கத்துக்கு குறிப்பிட்ட கால அவகாசம் இல்லை என்பதே அதற்கு முக்கியமான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ம)

## ஓகஸ்ட் 11...

ஆரம்பிக்கப்படும் சேவை ஓகஸ்ட் 11 ஆம் திகதி இரவு காங்கேசன்துறையிலிருந்து மீளவும் கொழும்புக்கு ஆரம்பிக்கப்படும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. முன்னர் இரவு தபால் சாதாரண தொடருந்து சேவையாக நடத்தப்பட்ட இந்தச் சேவையில் குளிரூட்டப்பட்ட பெட்டிகளை இணைத்து வடக்குக்கான சேவையாக ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## ஓராண்டு நினைவு நாள்

பிறப்பு 18 - 05 - 1940



இறப்பு 14 - 08 - 2021

அமரர் திரு.
**கந்தசாமி சிவானந்தம்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அன்புமொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்து
இன்பத்தை எமக்களித்த ஈடில்லா எம் அப்பாவே!
எங்கு நீங்கள் சென்றீர் ஏங்கித் தவிக்கின்றோம்
**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

"கந்தன் பதி"
வரியப்புலம், சுன்னாகம். (CS 20088) (3/6)

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**திருமதி.தங்கம்மா தெய்வேந்திரம்**
**[இராசமணி ஆசிரியர்]**

திருநெல்வேலி கலாசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.தங்கம்மா தெய்வேந்திரம் அவர்கள் நேற்று (03.08.2022) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வேந்திரம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை கண்ணம்மா தம்பதியினரின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி.இராசையா தம்பதியினரின் மருமகளும் ஜெயகௌரி, சிவகௌரி (ஆசிரியர்), விஜயகௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜரத்தினசிங்கம், கிருஸ்ணதாஸ், இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நடராஜா, இராசதுரை, கனகம்மா மற்றும் அன்னலட்சுமி, இரத்தினம், பசுபதியம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் கௌதமன், இராஜிதன் ,சர்மிலி, மலரினி, பிரதீபன், அனித்தா, பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மதீஸின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.08.2022 பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி பிராமண உயரப்புல இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
0774899121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழியல் மாநாட்டின் ஒளிப்படப் பதிவுகள்!














# யாழ். பல்கலையில் நேற்று மூன்றாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு!

யாழ்ப்பாணம், ஓக. 4

யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழியல் மற்றும் தமிழிசை வளர்ச்சிக்கென சிங்கப்பூர் எஸ்றேற்றர் கந்தையா கார்த்திகேசு நிதியத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையினால் நடத்தப்பட்ட மூன்றாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எம்.இரகுநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரையையும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர் மற்றும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா ஆகியோர் சிறப்புரைகளையும் நிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா திறப்புரையாற்றி ஆய்வரங்கைத் திறந்து வைத்தார்.

'ஈழத்துத் தமிழியல் மரபும் மாற்றமும்' என்ற கருப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆய்வு மாநாட்டில் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் துணைவேந்தரும், வவுனியா பல்கலைக் கழக வேந்தருமான பேராசிரியர் சு.மோகனதாஸ், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தமிழியலுக்குத் தொண்டாற்றிய மூத்த தமிழ்ப் புலமையாளர்களான திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம், செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம், திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து, திருமதி மங்கையர்க்கரசி நடராசா ஆகியோர் அவர்களின் அரும்பணியைப் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.



(ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோணப் பரவலைக் கட்டுப்படுத்த விரைந்து தடுப்பூசியைப் பெறுங்கள்

## வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 4**

**நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் மீள உருவெடுத்துள்ள நிலையில் மக்கள் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும். அத்துடன் தடுப்பூசிகளைச் செலுத்தி சமூகத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் தற்போது அதிகமாக இனங்காணப்பட்டு வருகின்றனர். அத்துடன் இரண்டு கொரோனா இறப்புக்களும் கடந்த ஜுலை மாதம் பதிவாகியுள்ளன.

எனவே இந்த நிலைமை பெருந்தொற்றாக மாறும் ஆபத்தாகக் காணப்படுகிறது. இந்தநிலையில் எம்மைப் பாதுகாத்துக்கொள்ள மக்கள் அதிகளவு கூடும் இடங்களில் பொதுச் சுகாதார நடைமுறைகளான முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், சரியான முறையில் கைகளைக் கழுவுதல் என்பவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

தடுப்பூசியை 20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பெற்றுக் கொள்ளவேண்டும். பிரதானமாக 60 வயதுக்கு மேற்பட்டவர்களும் வேறு நீண்டகால நோய் நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்களும் தமது நான்கு தடுப்பூசிகளையும் பெற்றிருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் திங்கள் மற்றும் புதன்கிழமைகளிலும் தெல்லிப்பழை மருத்துவமனையில் செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களிலும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய தினங்களிலும், ஊர்காவற்றுறை மருத்துவமனையில் செவ்வாய்க்கிழமைகளிலும் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளிலும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய தினங்களிலும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் புதன் மற்றும் சனி ஆகிய தினங்களிலும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் ஆகிய தினங்களிலும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படுகிறது.

ஆகவே தடுப்பூசிகளை செலுத்தாதோர் தடுப்பூசியை பெற்று கொரானாத் தொற்றிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் -என்றுள்ளது. (ச-26)



## விஷமிகளால் மரம் அழிப்பு

சாவகச்சேரி, ஓக 4

கொடிகாமம் - பாலாவி வடக்குப்பிரிவிலுள்ள காணியொன்றில் 40 க்கும் மேற்பட்ட பனை மரங்கள் கடந்த திங்கட்கிழமை அழிக்கப்பட்டன.

குறித்த பகுதியிலுள்ள அம்மன் கோயிலில் இடம்பெற்ற ஆடிப்பூர பொங்கல் விழாவில் கலந்து கொள்ள கிராம மக்கள் சென்றிருந்த வேளையில் இனந்தெரியாத விஷமிகள், இயந்திரத்தால் மரங்களை வெட்டி அழித்துள்ளனர்.

இது தொடர்பில் கிராமமக்கள் பிரிவு கிராம அலுவலருக்கு அறிவித்துள்ளனர். எனினும் மரங்கள் வெட்டுவதற்குரிய அனுமதிக்கு எவரும் கிராம அலுவலரிடம் விண்ணப்பித்து அனுமதி பெறவில்லை என அந்தப்பிரிவு கிராம அலுவலர் தெரிவித்தார்.

அதனையடுத்து கிராம மக்கள் பனை அபிவிருத்திச் சபைக்கு முறையிட்டுள்ளனர். (ஒ-14-9)

## உ/த பரீட்சை பெறுபேறுகள் அடுத்தவாரம் வெளியாகும்

கொழும்பு, ஓக.4

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் எதிர்வரும் வாரங்களில் வெளியிடப்படவுள்ளன என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைகள் நிறைவடைந்து ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையில் உயர்தரப் பரீட்சைகளுக்கான பெறுபேறுகளை எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சைக்கு இணையத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இணையத்தின் ஊடாக பரீட்சார்த்திகள் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க முடியும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சீனக்கப்பல் வருகையால் தமிழகத்தில் பாதுகாப்பு

கொழும்பு, ஓக.4

சீன ஆராய்ச்சிக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ள நிலையில், தமிழகக் கரையோரங்களின் முக்கியமான இடங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்த தமிழகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகக் கரையோரங்களின் பல இடங்களில் பொலிஸார் கண்காணிப்பைப் பலப்படுத்தவுள்ளனர். கடலோரப் பகுதிகளுக்குச் செல்லும் வீதிகளிலும் கடும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

செயற்கைக்கோள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் போன்றவற்றைக் கண்காணிக்கும் சீனக்கப்பலே இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வரவுள்ளது. இது தொடர்பில் இந்திய அரசாங்கம் அதிருப்தி அடைந்துள்ளது. (எ-இ)

## நல்லூர்க் கந்தன் மஹோற்சவ சிறப்பம்சம்




## பாராளும் வேலவனே



நல்லைப்பதியுறை கோமகனே
நம்பினவர் சோர்வு போக்கும்
நெற்றிக்கண் ஈன்றெடுத்த
தமிழுக்கே தமிழான வித்தகனே
ஔவைக்கே சுட்டகனி அளித்தவனே
ஒய்யாரமாய் மயிலேறி திருப்பவனி
காட்சியைக் காண ஓராயிரம் விழிகள்
போதாதே பஞ்சம் பட்டினி வாட்டாது
கொரோனா மீண்டும் வருத்தாமல்
காத்திட விரைந்தே வந்திடய்யா
பாராளும் வேலவனே!

*எஸ்.உமாசிவம்*

## வீட்டுப் பாடங்கள் செய்யாமையால் மாணவனைத் தாக்கினார் ஆசிரியர்

### பெற்றோர் கவலை



கிளிநொச்சி, ஓக. 4

வீட்டுப் பாடங்களை செய்யாமையால் மாணவனை ஆசிரியர் ஒருவர் கடுமையாகத் தாக்கியுள்ளார் என்று தாக்கப்பட்ட மாணவனின் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி கோணாவில் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.

பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவன் கடந்த வாரம் தனது சைக்கிளைத் தொலைத்த நிலையில் மூன்று நாள்களாகப் பாடசாலைக்குச் செல்லவில்லை.

அதன்பின்னர் இந்த வாரம் மாணவன் பாடசாலைக்குச் சென்றான். மாணவன் பாடசாலைக்குச் செல்லாத நாள்களில் வழங்கப்பட்ட வீட்டுப் பாடங்களை மாணவன் செய்யவில்லை எனத் தெரிவித்து பெரிய தடி ஒன்றால் ஆசிரியர் மாணவனைத் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான மாணவனின் கையில் பெரிய தழும்புக் காயங்களும் வீக்கங்களும் ஏற்பட்டன. இதனால் கவலையடைந்த மாணவனின் பெற்றோர் இது தொடர்பில் பாடசாலையின் உப அதிபரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மாணவன் தற்போது குறித்த பாடசாலைக்குச் செல்வதை விரும்பவில்லை என்றும் அவரை வேறு பாடசாலை ஒன்றில் இணைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோது மாணவனை ஆசிரியர் தாக்கியமை உறுதிப்படுத்தப்பட்டதோடு இது தொடர்பில் கோட்டக்கல்வி அதிகாரி மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டது என்று பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஒ-14-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யார் அந்த வரிசை குழப்பிகள்?

'எரிபொருள் வரிசையை குழப்புபவர்கள் பாதாள உலகக் கோஷ்டிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களை ஒடுக்க சட்டத்தை வன்மையாகப் பிரயோகிப்போம்' என்று தனது அக்கிராசன உரையில் முழங்கியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அப்படி எரிபொருள் வரிசையைக் குழப்புவோரை கட்டுப்படுத்தினாலேயே எரிபொருள் விநியோகத்தில் பெரும்பகுதி சீராகிவிடும் என்பது உண்மைதான். எனவே ரணில் அரசாங்கம் எரிபொருள் விநியோகத்தைச் சீராக்க வேண்டுமாயின் முதலில் செய்ய வேண்டியது இத்தகைய வரிசை குழப்பிகளை ஒடுக்குவதுதான். மக்களுக்கான போராட்டங்களில் ஈடுபட்டவர்களை வேட்டையாடுவதற்குப் பதிலாக இப்படிப்பட்ட சமூக விரோதிகளை ஒடுக்குவது நாட்டின் இப்போதைய நெருக்கடிக்கு ஓரளவு மருந்தாக அமையலாம். ஆனால், இதில் இன்னொரு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், இந்த வரிசை குழப்பிகளில் முதலிடத்தில் இருப்பது சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய பொலிஸாரே.

அண்மையில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் எரிபொருள் விநியோகம் சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெற்றபோது, பொலிஸாராலேயே எரிபொருள் விநியோகத்தில் குழப்பநிலை ஏற்படுகின்றது. அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவை விடவும் மேலதிக வாகனங்களில் அடிக்கடி வந்து, வரிசையைக் குழப்பி எரிபொருளை நிரப்புகின்றார்கள். முதலில் அதனைக்கட்டுப்படுத்த வேண்டும் என்று நிர்வாக அதிகாரிகளும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் ஒரே குரலில் தங்கள் மனக்குறையை முன்வைத்தனர். அதன் பின்னரே பிரதேச செயலர்கள் அனுமதித்தால் மட்டுமே பொலிஸாருக்கு எரிபொருளை நிரப்ப முடியும் என்ற திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. அதன் பின்னர் ஓரளவுக்கு எரிபொருள் வரிசைகள் சீராக நகர்வதை யாழ்ப்பாணத்தில் அவதானிக்கவும் முடிந்தது. எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸாரைத்தான் வரிசை குழப்பும் பாதாளக் கோஷ்டியினர் என்று குறிப்பிட்டாரோ என்னமோ.

இவ்வாறு, சட்டத்தை மீறி வரிசையைக் குழப்பி எரிபொருள் விநியோகத்தை சீர்கெடுத்து தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த முனையும் பொலிஸார் அதற்கு இடையூறாக இருப்போருக்கு பொய்க் குற்றச்சாட்டுகள் மூலம் சேறு பூசவும் முனைகின்றனர். புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மீதும் இவ்வாறானதொரு சோடிப்புக் குற்றச்சாட்டை பொலிஸார் முன்வைத்த போதும் இறுதியில் அது பிசுபிசுத்துப் போய்விட்டது. தன்னுடைய அலுவலகத் தேவைக்காக பிரதேச செயலர் சேமித்து வைத்திருந்த டீசலையும், தனது வீட்டுக்குச் சென்று வருவதற்காக அவர் தனது வாராந்த ஒதுக்கீட்டில் பெற்றுக்கொண்ட பெற்றோலையும் சமையலுக்காக வைத்திருந்த மண்ணெண்ணெயையும் கைப்பற்றிவிட்டு, ஏதோ பெரிய எரிபொருள் மாபியாவைப் பிடித்துவிட்டதுபோல பொலிஸார் படம் காட்டினார்கள். ஆனால், அவர்கள் சொல்வதெல்லாம் பொய்யென்பதை அடுத்தநாள் கவனவீர்ப்பில் ஈடுபட்ட முல்லைத்தீவு மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் வெளிப்படுத்தினர்.

சட்டத்தைக் காப்பதோடு அதனை மீறுவோரைக் கண்டுபிடித்துக்கைதுசெய்வதும்தான்பொலிஸாரின்பணி. ஆனால், சட்டத்தை மிதித்துக்கொண்டு அதனை மீறும் வேலையை நாடு இக்கட்டான நிலையில் இருக்கும் தருணத்தில்கூட பொலிஸார் கைவிடவில்லை. சில வேளைகளில் உயர் அதிகாரிகளுக்குத் தெரியாமல் பொலிஸார் இத்தகைய வேலைகளில் இறங்கியிருக்கவும்கூடும். அதனை தொடரவிடாமல் முளையிலேயே உயர் அதிகாரிகள் கிள்ளி எறிந்திருக்க வேண்டும். ஆனால், அவர்களும் அதனைச் செய்யவில்லை. உயரதிகாரிகள் கண்டுகொள்ளாத தைரியத்தில் தான் எரிபொருள் வரிசைகளைக் குழப்புவதும், தமது குழப்ப வேலைகளுக்கு தடையாக இருப்போர் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவதுமாக சில பொலிஸார் செயற்படுகின்றார்கள். அதற்காக, ஒட்டுமொத்தப் பொலிஸாரும் இதுபோன்ற அநியாய வேலைகளில் ஈடுபடுகின்றார்கள் என்றில்லை. அவர்களிலும் பெரும்பாலானோர் மக்கள் நலன் சார்ந்தும் செயற்படுகின்றார்கள். ஆனால், ஒருசில பொலிஸாரின் இத்தகைய மக்கள் விரோதப் போக்குகள் ஒட்டுமொத்தப் பொலிஸார் மீதும் வெறுப்புணர்வை இன்னும் அதிகப்படுத்திவிடும். இனியாவது கொஞ்சம் பொறுப்புணர்ந்து செயற்படுவார்களா..?

நாளொரு நல்வார்த்தை

"ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி" - ஜூலியஸ் சீசர்



### போராட்டத்துக்கு ஆதரவு

# பிரிட்டன் பெண்ணின் கடவுச்சீட்டு பறிமுதல்

**கொழும்பு, ஓக.4**



**பொதுமக்களின் போராட்டங்களுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்த வெளிநாட்டவரின் கடவுச்சீட்டு, நிபந்தனைகளை மீறிய குற்றச்சாட்டில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இலங்கைக் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் கடவுச்சீட்டைப் பறிமுதல் செய்துள்ளனர்.**

பிரிட்டன் பெண் ஒருவரிடம் இருந்தே கடவுச்சீட்டுப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

விசாரணைக்கான அவரைக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு வருமாறும்அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

அந்தப் பெண்ணுக்கு மருத்துவக் காரணங்களுக்காக கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அவர் உண்மையில் மருத்துவக் காரணங்களுக்காக நாட்டில் இருந்தாரா என்பதில் சந்தேகம் உள்ளது என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விசாரணைகள் முடிந்த பின்னர் கடவுச்சீட்டு மீள ஒப்படைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பிரிட்டன் பெண் வெளியிட்டுள்ள காணொலியில், இலங்கை மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக கவனத்தை ஈர்த்தமைக்காகத்தான் துன்புறுத்தப்படுகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஒரு நல்ல சுற்றுலாப் பருவத்தை இலங்கை எதிர்பார்த்திருக்கும் நிலையில், இது போன்ற பிரச்சினைகளைத் தவறாகக் கையாள்வது அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயலாகும் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்த இளைஞர் கைது

கொழும்பு, ஓக.4

கடந்த மாதம் 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்து ஜனாதிபதி அமரும் ஆசனத்தில் அமர்ந்து ஒளிப்படம் எடுத்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெரனியகலவில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்த 28 வயதான இளைஞர், சமன் புரகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, அலரி மாளிகைக்குள் புகுந்து மக்களை ஒன்றுதிரட்டிய குற்றச்சாட்டில் இருவர் ஜாஎல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 35 மற்றும் 37 வயதானவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-இ)

நாளை

05.08.2022
வெள்ளிக்கிழமை
ஆடி 20

சுபநேரம் : 06.04 - 07.34
ராகுகாலம்: 10.34 - 12.04

வரலக்ஷ்மி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

**யாழ்.மண்ணில் 08 வருட கால நம்பிக்கையை வென்ற**

## இந்தியன் செலக்ஷனின்
## ஆடி மாத
# ஆடித் தள்ளுபடி

இவ்வருடமும் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பட்டுச் சாறிகள், கொட்டுன் சாறிகள், வைபவங்களுக்கான சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் என ஏராளமான ஆடைத் தெரிவுகள்.



**காலம் : 29.07.2022 முதல் 08.08.2022 வரை**
**(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)**

இடம்:
**வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**


# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 4
யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் நடைபெறும் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும்' என்ற தொடரின் 32 ஆவது சொற்பொழிவு, நாளை பி.ப. 3.30 மணிக்கு நவாலி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
நாவலர் குருபூசை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, "நாவலரின் கல்வி மரபே இன்றைய தேவை" என்னும் கருப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (எ-14)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 4
நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் ....." என்ற கருப்பொருளில் சைவப்புலவர் பொன்.சந்திரவேலின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (எ-14)

## வலயக் கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு
## விலை மனுக்கோரல் - சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குதல் 01.09.2022 தொடக்கம் 31.08.2023 வரை

வலயக்கல்வி அலவலகம் வவுனியா தெற்கிற்குரிய செயலமர்வு / விழாக்களுக்கான சிற்றுண்டிகள் மற்றும் உணவு வழங்குவதற்கு தகுதியான தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களிடமிருந்து 01.09.2022 தொடக்கம் 31.08.2023 வரையான காலப்பகுதிக்கு வலயக்கல்வி அலுவலக பெறுகைக் குழுவினால் முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

01. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலயக் கல்வி அலுவலகம் வவுனியாவில் கிடைக்கும் கேள்விப்பத்திரம் (Application for Bid Documents') என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக்கட்டணமாக ரூபா 500 ஐ காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 04.08.2022 தொடக்கம் 16.08.2022 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
02. விலைக்கேள்விகள் 17.08.2022 திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக வயலக் கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்விநேர முடிவில் (10.00 மணிக்கு) விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில உடனடியாகத் திறக்கப்படும்.
03. தகுதி வாய்ந்த மற்றும் இதில் ஆர்வமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர் வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு அவர்களின் தொலைபேசி இலக்கத்துடன் 024 222 2026 தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
04. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வி யில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்**
**வலயக் கல்வி பணிப்பாளர்**
**திணைக்கள பெறுகைகள்குழு**
**வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு**

(CR 36875) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
23 - 05 - 1942

இறப்பு
15 - 08 - 2021



## அமரர் திருமதி சித்திராதேவி சுந்தரமூர்த்தி

(ஓய்வுநிலை ஆசிரியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**(திதி: அட்டமி 05.08.2022)**

ஓராண்டு ஒரு நொடியாய் ஓடிமறைந்தாலும்
ஒவ்வொரு வினாடியும் ஆறவில்லை எம்துயரம்.
உங்கள் எழில்முகம் காணத் துடிக்கின்றது எம் இதயம்
இரவுபகல் என்றில்லாது எம் வளர்ச்சிக்கு கனவிலும்
நினைவிலும் நிறைந்து எம்மை வழிநடத்திய அம்மாவே
தங்கள் வாழ்க்கைப் பயணத்தின் கல்வித் தடங்கள் பல.
இன்னும் நம்மில் பலபேரது கல்விப் பயணத்திற்கு வழிகாட்டும்
தடங்களாய்நீண்டு செல்வது தங்கள் தகைமையின் உயர்வே

***உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்***

கொரோனா அச்சம் காரணமாக. 31ஆம் நாள் நிகழ்வுக்கு அழைக்க முடியாத நிலை காணப்பட்டதால் நாளை (05.08.2022) வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆண்டுத் திவசத்தில் கலந்து கொண்டு எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**077 343 1934, 077 5306300,**
**0049 1767 0084 152, 001 416 602 0182** குடும்பத்தினர்
கல்லடிமுட்டு ஒழுங்கை, சாவகச்சேரி

(CR 36889 ) (3/6)

# மரண அறிவித்தல்



## சிவப்பிரகாசம் கந்தசாமி

(உரிமையாளர் திருப்பதி கிறீம் ஹவுஸ் மற்றும் ஸ்ரீஸ் கொமினிக்கேசன் வவுனியா)

தோற்றம் 05.05.1940
மறைவு 02.08.2022

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வவுனியா குருமண்காட்டினை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவப்பிரகாசம் கந்தசாமி அவர்கள் நேற்றுமுன்தினம் (02.08.2022 ) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துள்ளார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் செல்லாச்சி தம்பதிகளின் அன்பு புதல்வரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமி. காலஞ்சென்ற பாலசிங்கம். காலஞ்சென்ற முத்துலிங்கம். கிருஷ்ணதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஸ்ரீதரன். ஸ்ரீபிறேமா. ஸ்ரீராஜன். ஸ்ரீரஞ்சனா. ஸ்ரீசங்கர் (பாபு) ஸ்ரீகாந்திமதி. ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவகி. பாலச்சந்திரன். பைந்தமிழ்ச்செல்வி சந்திரன். காயத்திரி. ரவிச்சந்திரன். தர்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும். அலனா. அபினாஸ். கிஷான். சியான். அபிஷன். அஸ்மிதா. ஆசிகா. அஸ்வீன். அரசிகா. அருவிகா. அருண். சேரன். சாதுரிஜா. ஜஸ்ரிஜா. அட்சஜா (மாணவிகள். வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) கிஷோபன். விக்னோபன் . ஜோகித் . ஹன்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் குருமண்காடு இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக் கிரியைகளுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**மகன் ஸ்ரீசங்கர் (பாபு)**
**(திருப்பதி கிறீம் ஹவுஸ், ஸ்ரீஸ் கொமினிக்கேசன் வவுனியா)**
**0777363175**


(CS 1016) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
02 - 08 - 1940

உதிர்வு
05 - 07 - 2022



அமரர்

## கந்தையா சிவலிங்கம் (சிவா)

உறவுகளை நெஞ்சார நேசித்து
மனதார வாழ்ந்த எங்கள் அப்பாவே
பூவுலகை விட்டு மறைந்தாலும்
எங்களின் மனதை விட்டு என்றும் அகலவே மாட்டீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவமகா காளி
அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்!

குடும்பத்தினர்
செருக்கப்புலம் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(CS 20182) (3/6)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

# VACANCIES

**FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE**

University of Jaffna will entertain applications to reach us on or before 18.08.2022 from qualified Sri Lankan Nationals for the under mentioned Temporary posts.

- **Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in Accounting / Commerce / Financial Management / Human Resource Management / Marketing / Tourism and Hospitality Management**

*Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator.*

**Minimum Requirements/Qualifications:**

01. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours; OR
02. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours; OR
03. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, AND (b) a recognized postgraduate degree in the relevant subject

| Post | Salary Scale |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs. 49,860/- p.m (Fixed) |
| Temporary Demonstrator | Rs. 40,920/. p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

Application forms and other details will be available in the website: www.maco.jfn.ac.lk. Downloaded application forms should accompany with the paid Bank Slip for deposit of a sum of Rs.100/- credited to the Peoples' Bank Reference No: 970000090000387 of Bursar, University of Jaffna.

Duly completed application forms along with payment receipt and relevant educational certificates to be posted to the below mentioned address: Assistant Registrar, Faculty of Management Studies and Commerce, 10th Lane, Kalasalai Road, Thirunelvely, Jaffna.


Those who wish to apply for more than one post should submit separate application for each post.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

Registrar,
University of Jaffna,
03.08.2022

(cr.36888) (2.6)

# மரண அறிவித்தல்



பிறப்பு
21.03.1939

இறப்பு
02.08.2022

## திரு. மாணிக்கம் துரைசிங்கம்

புங்குடுதீவு இறுபிட்டியைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்பொழுது சுவிஸில் வசித்து வந்தவருமான மாணிக்கம் துரைசிங்கம் அவர்கள் கடந்த (02.08.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிவசாமி (வர்த்தகர்) நல்லபிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும், மங்கையற்கரசியின் (பேபி) அன்புக் கணவரும், விக்னேஸ்வரன் (ஈசன்), விக்கினராசன் (ராசன்), விஜயகலா, கௌசல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கவிதா, சிவானந்தி ஆகியோரின் மாமனாரும், நிலானி, நிஷ்மா, றோசன், கிஷானி, நவீனா, அபிசன், நிந்துஜா, தர்மியா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சேதுராமன், பாலசிங்கம், அன்னலெட்சுமி மற்றும் திருநாவுக்கரசு, வரதலிங்கம் ஆகியோரின் சகோதரரும், இரத்தினபூபதி, சிலோன்மணி, காலஞ்சென்ற முருகேசு மங்களேஸ்வரி, சாரதா, சுசிலாதேவி, ஏகாம்பரநாதன், லோகநாதன் (சின்னாம்பி), காலஞ்சென்ற கௌரீஸ்வரி, தவரஞ்சிதமலர், நகுலேந்திரநாதன், சந்திரநாதன் ஆகியோரின் மைத்துனரும், வைரமுத்து, திலகவதி, இந்திராணி, காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி, சசிகலா, ஜெயக்குமாரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிற்ஸலாந்தில் நடை பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 1046/10,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS20181) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 25 . 08 . 1936



உதிர்வு 03 . 08 . 2022

## திரு . குட்டித்தம்பி குணநாயகம்

(ஓய்வு நிலை வரி மதிப்பீட்டாளர் – உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

குரும்பசிட்டி கிழக்கை பிற்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திரு. குட்டித்தம்பி குணநாயகம் அவர்கள் நேற்று (03.08.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி பூரணம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவரான ஞானசக்தியின் அன்புக் கணவரும் யாழினி, கோகுலன், அமரர்.எழில்சிறி, அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவராசன், சுரேஸ்குமார், சாயிகீதா, கல்யாணி ஆகியோரின் அன்பு மாமனாரும் அமரர்களான இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, இராசநாயகம் ஆகியோரின் சகோதரரும் சங்கரி, சியாம், தனுசன், பைரவி, கீர்த்திகா, அன்ரியா, ஆருஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**076 1629 386**
**077 137 1483**

தகவல்:
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 03 . 1969



மறைவு 03 . 08 . 2022

## திரு. திருநாவுக்கரசு இரவிச்சந்திரன் (ரவி)

நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இரவிச்சந்திரன் அவர்கள் நேற்று (03.08.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம்-கோணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தமீனாவின் (மீனா) அன்புக் கணவரும் கபில்ராஜ், மிதுர்ஷா, ஜானுஷா, கோகுல்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் டெசிராணி, ஜெநோராணி, மகேஸ்வரன் (கண்ணன்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (ஈசன்), உதயச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி, ஜெயராசா, காலஞ்சென்ற ரஞ்சனா, லலிதா, சுஜித்தா (சோபா), நிர்மலா, ரவீந்திரன் (ஜேர்மனி), ரவிசங்கர் (சுவிஸ்), மதிவதனி, ஜெய்சங்கர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.08.2022) பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானபண்டிதா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
**077 959 0041**

# 2048 இல் இலங்கை அபிவிருத்தியடைந்த நாடு

## ரணிலின் எதிர்பார்ப்பு இது

கொழும்பு, ஓக. 4

தேசிய பொருளாதாரக் கொள்கையின் ஊடாக நாட்டையும், நாட்டு மக்களையும் கட்டியெழுப்பும் செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றால், 2048 ஆம் ஆண்டிலே சுதந்திர தின நூற்றாண்டைக் கொண்டாடும் போது, முழுமையான அபிவிருத்தி அடைந்த ஒரு நாடாக எம்மால் மாற முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன் எதிர்பார்ப்பை வெளியிட்டார் '2025 ஆம் ஆண்டளவில் ஆரம்ப நிலை வரவு-செலவுத் திட்டத்தில் மிகை ஒன்றினை ஏற்படுத்துவது எமது முயற்சியாகும். பொருளாதார அபிவிருத்தி வேகத்தை நிலையான தன்மைக்கு உயர்த்துவதும் நமது முயற்சியாகும். 2026 ஆம் ஆண்டில் நிலையான பொருளாதார அடிப்படையை உருவாக்கிக் கொள்வது எமது எதிர்பார்ப்பாகும். தற்போது அரச கடன் அளவானது மொத்த தேசிய உற்பத்தியின் நூற்றுக்கு 140 சதவீதம் ஆகும். இதனை 2032 ஆம் ஆண்டளவில் மொத்த் தேசிய உற்பத்தியில் நூறு சதவீதத்தை விடவும் குறைப்பது எமது திட்டமாகும்.

நான் இவ்வாறான நீண்டகால இலக்குகளுக்குத் திட்டங்களைத் தயாரிக்கும்போது சிலர் பரிகாசமாகப் பார்க்கின்றார்கள். கேலிக்கதைகள் சொல்கின்றனர். ஆம். நான் ஏனைய அரசியல்வாதிகள் போன்றவன் அல்ல. என்னிடம் இருப்பது நீண்டகாலத் திட்டங்கள். நான் திட்டமிடுவது எனது முன்னேற்றத்துக்காக அல்ல. இளைஞர் சமுதாயத்துக்காகவே. நாளைய நாளுக்காகவே. நான் இன்று நடும் மரத்தின் அறுவடையை எனக்கு அனுபவிக்கக் கிடைக்காது என்பதை நான் நன்றாக அறிவேன்.

ஆனாலும் நாளைய தினம் எமது பிள்ளைகளான எதிர்காலப் பரம்பரைகள் அந்த அறுவடையை அனுபவிப்பார்கள் -என்றும் அக்கிராசன உரையில் தெரிவித்தார். (ஒ-5)


### விற்பனைக்கு

லயன் செப்பெட் நாய்க்குட்டிகள்
(ஆண்) விற்பனைக்கு
**074 300 8290**


# மரண அறிவித்தல்

மலர்வு 12.09.1941



உதிர்வு 02.08.2022

## திருமதி கந்தையா நாகேஸ்வரி அம்மா

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகேஸ்வரி அம்மா கடந்த (02.08.2022) செவ்வாய்க்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும், அருந்ததி (ஜேர்மனி), அன்பழகி (சுவிஸ்), அகிலா (சுவிஸ்), அமுதா(பிரான்ஸ்), அகிலன் (அமெரிக்கா), அஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காசிப்பிள்ளை (ஜேர்மனி), சுபாஷகரன் (சுவிஸ்), ரமணிதரன் (சுவிஸ்), இரமேஷ் (பிரான்ஸ்), குகேதினி (அமெரிக்கா), சசிகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சக்தீபன், அபிரா, சதீபன், ஐஸ்வர்யா, அச்சுதா, சஞ்சீவன், ரணுஜன், தனோஜன், தகானா, ஜஷ்வந்தி, லவதீசன், விஷ்ணுசெல்லத், அபிராமி, அஷ்வினி, சித்தாத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வீரத், ஜானு, ரியோ, அர்ஷசுதா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் (சுவிஸ்), தட்ஷணைகைலாயபதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வள்ளிப்பிள்ளை, சுப்பிரமணியம், செல்லத்துரை, சண்முகரத்தினம், வீரசிங்கம் மற்றும் சிவபாக்கியம், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் யோகராணி (சுவிஸ்), இராஜினிதேவி, ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி தெற்கு, கைதடி. தகவல்: குடும்பத்தினர்

# மூன்றாம் ஆண்டு நினைவு



தோற்றம் 21 . 12 . 1950

மறைவு 07 . 08 . 2019

அமரர்

## சாம்பசிவம் தியாகலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

வழிகாட்டும் குடும்பத் தலைவனாய்
நன்மைசேர்க்கும் நல்ல நண்பனாய்
அறிவார்ந்த ஆசிரியனாய்
ஆளுமையான அதிபராய்
உண்மையான தொழிற்சங்க வாதியாய்
நேர்மையான அரசியல் விமர்சகனாய்
இடம்மாறாத இடதுசாரியாய்
களைப்பற்ற கலைஞனாய்
ஓய்வற்ற ஓய்வூதியனாய்
மனிதம் மதிக்கும் மனிதனாய் - எம்மோடு
இம்மண்ணில் அன்போடு வாழ்ந்திருந்த
எம்தெய்வம் - தெய்வத்திடம் சேர்ந்து
ஆண்டு மூன்று ஆனதுவோ?

அமரத்துவம் அடைந்த ஆத்மாவிடம் ஆசி வேண்டி ஆத்மா அமைதிபெற ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

இல 68/09, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டமைப்பு கோரிக்கை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான முக்கியமான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை 4 மணியிலிருந்து 5.30 மணி வரை இடம்பெற்றது. இதன்போது அரசதரப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சி.சிறீதரன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரம், செல்வம் அடைக்கலநாதன், விநோநோகராதலிங்கம், இரா.சாணக்கியன் ஆகியோர் கலந்துகொண்டனர். உடல்நலம் ஒத்துழைக்காமையால், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள முடியவில்லை.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்று ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தியது.

**தொல்லைதரும் தொல்பொருள் திணைக்களம்**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி ஆக்கிரமிப்புத் தொடர்பில் கூட்டமைப்பு முறையிட்டது. முப்படையினர், வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என்று பல்வேறு தரப்புக்களும் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கின்றன.

முப்படையினர் தமது தேவைக்கு புதிதாகக் காணிகளை சுவீகரிக்க முயல்கின்றனர். ஒவ்வொரு தடவையும் மக்கள் போராட்டத்துக்கு அழைக்க, நாம் சென்று ஆக்கிரமிப்புகளைத் தடுத்து நிறுத்துகின்றோம் என்று கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டியபோது, சம்பந்தப்பட்ட தரப்பினரை அழைத்து ஆராய்வதாக ரணில் குறிப்பிட்டார். அதற்கு கூட்டமைப்பினர், அதுபற்றி பின்னர் ஆராயுங்கள் முதலில் காணி சுவீகரிப்பு மற்றும் ஆக்கிரமிப்பை தடுக்கும் உத்தரவைப் பிறப்பியுங்கள் என்று கேட்டுக்கொண்டனர். அதற்கும் ரணில் விக்கிரமசிங்க இணங்கியுள்ளார். அத்துடன் தொல்பொருள் திணைக்களத்தால் உங்களுக்கு மாத்திரமல்ல இங்கும் (தென்பகுதி) தொல்லைதான் என்றும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

**அரசியல் கைதிகள்**

ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசியல் கைதிகளை விடுவிக்குமாறும் கூட்டமைப்பினர் கோரினர். கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது இந்த விடயம் ஆராயப்பட்டு அது தொடர்பில் முன்நகர்வு இடம்பெற்றதையும் கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டி அதனை உடனடியாகவே நிறைவேறவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். அதேபோன்று காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணைகளை துரிதமாக ஆரம்பிக்கவும் கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டனர்.

**கல்முனை விவகாரம்**

கல்முனை தமிழ் பிரதேசசபை தொடர்பில் நல்லாட்சி காலத்திலும் ஆராயப்பட்டு நிறைவேற்றப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி இப்போதாவது அதனைச் செயற்படுத்துமாறு அழுத்தமாகக் கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டனர். இதன்போது சம்பந்தப்பட்ட விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தார். அவர் விடயங்களைக் கையாள்வதாக உறுதியளித்தார்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், இன்றைய (நேற்று) அக்கிராசன உரையில் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியை மாத்திரம் குறிப்பிட்டீர்கள். கிழக்கு மாகாணத்தை கைவிட்டு விட்டீர்கள் என்று சுட்டிக்காட்டினார். அதற்கு, அது தவறுதலாக விடுபட்டுவிட்டது என்று மன்னிப்புக் கோரினார் ரணில்.

**தேசிய வேலைத் திட்டத்துக்கு ஆதரவு**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், அரசியல் தீர்வு எட்டப்படாமல், சர்வகட்சி அரசாங்கத்தில் பங்காளிகளாக இருக்க முடியாது என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான த.சித்தார்த்தன் குறிப்பிட்டுள்ளார். இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், 'கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இது தொடர்பில் என்னிடம் சில விடயங்களைத் தெரிவித்துள்ளார். சர்வகட்சி அரசாங்கத்தின் தேசிய வேலைத் திட்டம் தயாரிப்பதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். அதன் பின்னர் உள்ள நிலைமையைப் பார்த்து நாம் முடிவு எடுப்போம் என்றுதான் சம்பந்தன் தெரிவித்துள்ளார்' என்று குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி ரணில், புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்புத் தொடர்பிலும் கூட்டமைப்பின் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (அ-ஒ-5)

## தமிழ்...

றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைத்து அக்கிராசன உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**பிரித்தாளுதல்**

அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்டில் பிளவுகளைப் பயன்படுத்தினர். பிரித்து ஆள்வதன் அனுகூலத்தை அனுபவித்தனர். முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பிரச்சினைகளை உருவாக்கினர். இவ்வாறு இன ரீதியாகவும் சமய ரீதியாகவும் பல்வேறு விதமான பிளவுகளை ஏற்படுத்தி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கு முயற்சித்தனர்.

**கொள்கையைக் கைவிடேன்**

எனது கனவு ஒருதாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக வாழக்கூடிய தேசமொன்றை உருவாக்குவதாகும். இந்த முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டதன் காரணமாக நான் அரசியல் ரீதியாகத் தோல்விகளைச் சந்தித்தேன். சிங்கள இனவாதிகளினதும், தமிழ், முஸ்லிம் இனவாதிகளின் விமர்சனங்களுக்கும் ஆளானேன். இனவாதிகளுக்கும், சமயவாதிகளுக்கும் எதிராக தொடர்ச்சியாக ஈடுபட்டமையால் சில அரசியல் கட்சிகள் என்னை தேசத்துரோகியாகவும் சமய எதிரியாகவும் அவதூறுக்கு உட்படுத்தின. எனினும் நான் எனது கொள்கையில் இருந்து விலகிச் செல்லவில்லை. ஒருபோதும் நான் அந்தக்கொள்கையிலிருந்து விலகவும்மாட்டேன். இன்று இளம்பராயத்தில் பெரும்பாலானவர்கள் எனது அந்தக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**புலம்பெயர் தமிழர்கள்**

இங்கு பல வருட காலமாக தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டியது தற்போது அத்தியாவசியமான ஒன்றாகும். போரினால் மட்டுமல்லாது அவர்கள் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தீர்க்கவேண்டிய காணிப் பிரச்சினைகள் பல உள்ளன. வடக்கின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக நாம் புதிதாகச் சிந்திக்கவேண்டியுள்ளது. வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தமிழ் மக்களுடன் நெருங்கிச் செயற்பட்டு, இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துக்கு அவர்களது ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்கு முழுமையான அரசியல் மறுசீரமைப்புத் திட்டமொன்று தேவைப்படுகின்றது. அந்த மறுசீரமைப்பை எனது பதவிக்காலத்தினுள் நான் மேற்கொள்வேன் - என்றார். (அ-ஒ-5)

## கட்டுமட்டில்லாத...

களைவிடவும் அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனை உடனடியாக மாற்றி அமைத்தல்வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்க உரையின் போது நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

எதிர்வரும் தேர்தல் ஒன்றின்போது அதிகம் இளைஞர், யுவதிகளே நாடாளுமன்றத்துக்கு வருகை தருதல்வேண்டும். எனவே அதற்கு இடமளிக்கக்கூடிய வகையில் புதிய மனப்பான்மைகளைக் கொண்ட, புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டியமை இங்கு முக்கியமான பணியென நான் கருதுகின்றேன்.

**அதிகளவு அதிகாரம்**

தற்போது தேர்தல் ஆணைக்குழு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்துக்கும் உறுப்பினர்களை நியமிக்கும் முழு உரிமையும் ஜனாதிபதிக்கே உண்டு. அது ஜனநாயகத்துக்கு உகந்த ஒன்றல்ல என்பதை நான் நேரடியாகக் குறிப்பிட விரும்புகின்றேன். நாம் அந்த நிலையை மாற்றியமைத்தல்வேண்டும். ஒருநாட்டின் ஜனாதிபதி என்பவர் மக்களுக்கு மேலால் வாழுகின்ற அரசராக அல்லது கடவுளாக இருக்கவேண்டியதில்லை. அவரும் பிரஜையில் ஒருவர். எனவே தனியான கொடி, இலச்சினை, தனியான கௌரவங்கள் மூலம் புனிதத் தன்மைக்கு ஆளாக வேண்டியதில்லை.

**22 ஆம் திருத்தத்தை ஆதரியுங்கள்**

அரசமைப்பு மறுசீரமைப்பு செயற்பாட்டின் ஆரம்பமாக, 19ஆவது திருத்தத்திலிருந்த அனைத்து நேர்மறையான விடயங்களையும் உள்ளடக்கி 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்காக இந்தச் சபையின் முழுமையான ஆதரவை எதிர்பார்க்கின்றேன்.

22 ஆவது அரசமைப்புத் திருத்த வரைவு தற்போது நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது பற்றிக் கலந்துரையாடி பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவது பொருத்தம் என நான் கருதுகிறேன். எமக்குத் தேவையான அனைத்தும் 22 ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது போகலாம். அது எமது மறுசீரமைப்புத் தொடரின் முதலாவது அடித்தளமாகும். இந்தச் சபையிலுள்ள அனைவரும் ஏகமனதாக அதனை நிறைவேற்றிக்கொள்வது மிகவும் சிறந்த முன்னோக்கிய நகர்வாக அமையும்.

**மக்கள் சபை நிறுவுதல்**

இனிமேல் மேற்கொள்ள வேண்டிய சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்கள் என்ன என்பது பற்றித் தீர்மானிப்பதற்காக மக்கள் சபையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

எமது நாட்டின் ஜனாதிபதி முறைமையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமா? நாட்டுக்கு மிகவும் பொருத்தமான முறைமை எது? ஆட்சி முறையானது எவ்வாறான மறுசீரமைப்புகளுக்கு உட்பட வேண்டும்? உள்ளிட்ட அனைத்து விடயங்களும் மக்கள் சபையின் ஊடாகக் கலந்துரையாடப்படும்.

**வாக்குறுதி காற்றில்**

எமது நாட்டில் பல ஜனாதிபதி தேர்தல்களின்போது முன்வைக்கப்பட்ட பிரதான வாக்குறுதிதான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கப்படும் என்பதாகும். எனினும் அந்த வாக்குறுதியை வழங்கி அதன் மூலம் அதிகாரத்துக்கு வந்த எவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவில்லை. மாறாக ஒருவர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தாலும், அதன் பின்னர் ஆட்சிக்கு வரும் கட்சியினால் மீண்டும் அதனை மாற்றியமைக்கும் இயலுமையுள்ளது. அதனால்தான் நாங்கள் மக்கள் சபை ஊடாக பொதுவான தேசிய இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய தேவையுள்ளது.

மக்கள் சபை என்பது முழுமையாக சுயாதீனமாகச் செயற்படும் ஒரு நிறுவனமாகும். அரசாங்கம் அதற்குத் தேவையான வளங்களை வழங்குவதை மாத்திரமே மேற்கொள்ளும். அதன் பணிகளுக்கு அல்லது தீர்மானங்களுக்கு அரசாங்கத்தின் விதவித தாக்கமும் இருக்காது - என்றார். (அ-ம-ஒ-5)

## கூட்டமைப்பு...

பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் நன்மைக்காக எனக்கு வாக்களித்தார்கள் இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின் போது நேரடியாகத் தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலின் இறுதியில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதித் தெரிவின்போது நாம் கட்சியாக முடிவெடுத்து உங்களுக்கு வாக்களிக்கவில்லை. ஆனாலும், நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் உங்களுடன் பேச்சு நடத்துகின்றோம் என்று குறிப்பிட்டதும் அவரை இடைமறித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'உங்களில் சிலர் தமிழ் மக்களின் நன்மை கருதி எனக்கு வாக்களித்தனர்' என்று குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், 'நாங்கள் ஜனாதிபதித் தெரிவின்போது இரகசியமாகவே வாக்கைப்பதிவுசெய்தோம். அப்படியானநிலையில், நாங்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பது எப்படி உங்களுக்குத் தெரியும்? அப்படித் தெரியும் என்றால் இந்த வாக்களிப்பே தவறானதே?' என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு ஜனாதிபதி ரணில், 'கூட்டமைப்பில் மாத்திரமல்ல ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தும் எனக்கு எத்தனை பேர் வாக்களித்தார்கள் என்பதும் தெரியும்' - என்றார். (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மற்றொரு டீசல் கப்பலுக்கு கட்டணம் செலுத்தப்பட்டது

## இறக்கும் பணிகள் ஆரம்பம் எரிசக்தி அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைக்கு வந்துள்ள மற்றொரு டீசல் கப்பலுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் நேற்று முன்தினம் செலுத்தப்பட்டுள்ளது என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அதன்படி குறித்த கப்பலிலிருந்து டீசலை இறக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் மற்றொரு பெற்றோல் கப்பல் மற்றும் டீசல் கப்பலுக்குமான முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விமானங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக ஒரு வருட கால ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளது. அதன்படி முதல் ஜெட் எரிபொருள் கப்பல் எதிர்வரும் 12ஆம் மற்றும் 14ஆம் திகதிக்குமிடையில் வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

(ச-இ)

**கார்கள் / வான்கள் குத்தகைக்குத்தேவை**

தனியார் நிறுவனத்திற்க்கு கார்கள் / வான்கள் மாதாந்த குத்தகைக்கு சாரதி இல்லாமல் தேவை.

தொடர்புகளுக்கு: 077 839 5849

**துரித பொதிகள் சேவை**

சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும். (குறிப்பு :- பணியாளர்கள் தேவை)

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S. Road
Jaffna
077 755 4528

**Visit, Study & Work**

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்

- Visitor / Tourist Visa – All countries
- Minor Education – under age 17
- Skilled Migration – Express entry (PR)
- Student Visa
- Study & Work – Canada (IELTS தேவையில்லை)
- o Canada, UK, Australia & New Zealand (IELTS 6 – 6.5 தேவை)
- o France, Germany & Latvia, Swedan, Finland (IELTS தேவையில்லை)

Visa Consultant
134, Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Tel: 0770385584
naltcjaffna@gmail.com

**TECHNO WORLD**

**தொழில்நுட்பக் கல்லூரி**

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L 2024 புதிய கல்வியாண்டு**
**A/L 2022 DAY CLASS**
(இம் முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்குரியது)

❖ காலம் 06,08. 2022 ❖ நேரம் : 8.30 AM

தொடர்புகளுக்கு - 077 017 5346 (CR 36885) (3/6)

**காணி விற்பனைக்கு**

யாழ் நாவற்குழியில் 57 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள். களஞ்சியசாலைகள். மண்டபங்கள். வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493, 076 490 6029

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## கணேஸ் சாந்தி

(அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்)

திதி: சப்தமி

பிறப்பு 24.08.1985 இறப்பு 15.08.2021

எங்கள் அருமை மகளே
நாங்கள் ஆசை ஆசையாக பெற்று வளர்த்த
அன்புத் செல்வமே
என் பிள்ளை இல்லாமல் தவிக்கின்றேன்
துடிக்கின்றேன் என் உயிர் நீங்கள்
என் உலகமே நீங்கள் தான் என்று இருந்தேன்
செல்லமே
பதினொரு வருடம் தவம் இருந்து பெற்ற
எங்கள் செல்ல மகளே
உங்களை பெற்ற தாய் நான் படும் துன்பத்தை
வார்த்தையால் சொல்லமுடியாது.
எழுத்தில் எழுத முடியவில்லை என் பிள்ளையே
எப்போ காண்பேன்
மனம் ஏங்குது எந்நேரமும் என் பிள்ளையின்
நினைவில் வாழ்ந்து செத்துக் கொண்டு
இருக்கும் உங்கள் அம்மா.


என் அம்மா சாந்தி ஏன் அம்மா என்னைவிட்டு பிரிந்து சென்றீர்கள்? நீங்கள் இல்லாமல் மரணவேதனை அனுபவிக்கின்றேன் என் சாந்தி கனவிலும் நினைவிலும் எப்போதும் உங்கள் நினைவுதான் அம்மாசாந்தி என்றும் உங்கள் நினைவுடன் வாழும் அன்புக் கணவன்

றமணன்

வழக்கம்பரை,
சுழிபுரம்.

# 31ஆம் நாள் நினைவு நிகழ்வும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 16 - 06 - 1950



ஆண்டவன் அடியில் 05 - 07 - 2022

## அமரர் ஆறுமுகம் தர்மராசா

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும். தொலைபேசி. சமூக வலைத் தளங்கள் மூலமாக அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி. சுவரொட்டிகள். பதாகைகள். மலர் வளையங்கள் மூலமாக அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கு பற்றியவர்களுக்கும் இந்த வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

33, பொன்னப்பா வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
07[illegible]

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 - 07 - 1949



இறப்பு 01 - 08 - 2022

## இராசப்பு ஜேக்கப்

(முன்னாள் கூட்டுறவுச் சங்க முகாமையாளர், அருணோதய மன்ற ஸ்தாபக உறுப்பினர் மற்றும் புனித அன்னாள் கடற்றொழில் சங்க முன்னாள் தலைவர்)

கூழாவடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசப்பு ஜேக்கப் கடந்த (01.08.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசப்பு - ஆனாசி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அந்தோனிமுத்து - மாத்தம்மா தம்பதிகளின் மருமகனும். திரேசம்மாவின் அன்புக் கணவரும் ஸ்ரெலா. ஜெயராஜ். கலிஸ்ரா. நந்தன். ஜெனித்ரா. அருள்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும். எட்வேட். சுகிர்தா. விஜியகுமார். றோயல். யோகரத்தினம் மொறாயஸ். மதுஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும். காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை. அருளானந்தம். மரியம்மா. லூத்தம்மா. அருளப்பு மற்றும் அன்னக்கிளி ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை. பறனாந்து மற்றும் யேசுதாசன். சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும். டினோசன். ஸ்ரெபாணியா. ஜெனுசன். றெமோசன். விதுசிகா. அலைக்சன். அபிஷ்ஷா. ஜெசிக்கா. றொம்சிக்கா. அரோன். செரோன். ஜெனிஸ்ரன். யசோன். அனுஷ். டிசோன். றியோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.08.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை

076 553 3313 (CS 45801) (3/6)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org